# 16-04-2024 செய்தி

## தென்மேற்குப் பருவமழை இயல்பைவிட அதிகரிக்கும்

- 1951 முதல் 2023 வரையிலான தரவின்படி, எல்-நினோ நிகழ்வைத் தொடர்ந்து லா-நினோ நிலவிய 9 முறை, நாட்டில் தென்மேற்குப் பருவமழை இயல்புக்கு அதிகமாகப் பதிவானது.
- தற்போது மத்திய பசிபிக் பெருங்கடல் பகுதியில் வலுகுறைந்ததாகக் காணப்படும் எல்-நினோ, பருவமழை தொடங்கும்போது முற்றிலுமாக மறைய வாய்ப்புள்ளது.
- இதையடுத்து, லா-நினோ ஆகஸ்ட்- செப்டம்பர் மாதங்களில் தொடங்கும் நிலையில், நிகழாண்டு பருவமழை நீண்ட கால சராசரி மழைப் பொழிவைவிட (87 செ.மீ) 106 சதவீதம் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- நாட்டின் வடமேற்கு, கிழக்கு, வடகிழக்கு பகுதிகளில் இயல்பைவிட குறைவான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- பருவமழை காலத்தில் இந்திய பெருங்கடலின் கிழக்கு, மேற்குப் பகுதிகளில் ஏற்படும் வெப்ப மாறுபாடு நேர்மறையாக இருக்க வாய்ப்புள்ளது.
- இமயமலை, யூரேஷிய நிலப்பரப்புகள் பனியால் சூழப்பட்டிருந்தால், அவை பருவமழையில் தாக்கத்தை ஏற்படுத்தும், நிகழாண்டு அவை குறைவாக உள்ளன. இந்த இரண்டு சூழல்களும் பருவமழைக்கு சாதகமாக உள்ளன என்றார்.
- எல்-நினோ என்பது மத்திய பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பு நீர் குறிப்பிட்ட கால இடைவெளியில் சராசரிக்கும் அதிகமாக வெப்பமடைவதால் ஏற்படும் நிகழ்வாகும்.

## சியாச்சினில் 40 ஆண்டுகளாக கோலோச்சும் இந்திய ராணுவம்!

- இந்திய ராணுவம் உலகின் மிக உயரமான போர்க்களமான சியாச்சினை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து 40 ஆண்டுகளைக் கடந்துள்ளது.
- இமயமலையின் காரகோரம் மலைத் தொடரில் 2,000 அடி உயரத்தில் சியாச்சின் பனிச் சிகரம் உள்ளது.
- கடும் குளிரும், பலத்த காற்றும் வீசும் சியாச்சின் பணியாற்றுவதற்கு மிகவும் சவாலான போர்க்களமாகும்.
- இந்திய இராணுவம் 1984, ஏப்.13-இல் 'ஆப்பரேஷன் மேக தூத்' நடவடிக்கையின் மூலம் சியாச்சினைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது.
- பாதுகாப்பு ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சியாச்சினில் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளால் ராணுவத்தின் செயல்பாடுகள் முன்னேற்றம் கண்டுள்ளன.
- கடும் குளிரை எதிர்கொள்வதற்கான சிறப்பு ஆடைகள், மலையேற்றத்துக்கான சாதனங்கள் ஆகியவை இங்கு நிலவும் கடுமையான சூழலை எதிர்கொண்டு வாழ்வதற்கான திறனை அதிகரித்துள்ளது.
- ஒவ்வொரு ராணுவ வீரருக்கும் கையடக்க வானிலை கண்காணிப்பு சாதனம் வழங்கப்பட்டுள்ளது.
- சவால்கள் நிறைந்த சூழலில் அனைவரையும் பாதுகாக்க பார்தாபூரில் உள்ள மருத்துவமனை மற்றும் மலையடி வாரத்தில் உள்ள முகாமில் அறுவை சிகிச்சை, ஆக்சிஜன் உற்பத்தி நிலையம் உள்ளிட்டவை உள்ளன.

# சர்வதேச அமைதி நிலைநாட்டும் வழி!

- இஸ்ரேல் மீது ஈரான் ஏப்ரல் 14 அன்று நடத்திய ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல், மத்தியக் கிழக்குப் பிராந்தியத்தில் ஒரு புதிய போருக்கான தொடக்கமோ என்கிற அச்சத்தை உலக நாடுகளிடையே ஏற்படுத்தியுள்ளது.
- சிரியாவில் உள்ள தங்கள் துணைத் தூதரகத்தில், ஏப்ரல் 1 அன்று நடத்தப்பட்ட தாக்குதலுக்கு இஸ்ரேலைக் குற்றம்சாட்டிவந்த ஈரான், அதற்குப் பதிலடியாக இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.
- விஷயம் இப்போதைக்கு முடிவுக்கு வந்தாலும், 'இஸ்ரேல் திருப்பித் தாக்கினால், பெரும் பலத்துடன் திருப்பியடிப்போம்' என அந்நாடு சூளுரைத்திருக்கிறது.
- இஸ்ரேல் நிச்சயம் திருப்பித் தாக்கும் என்பதை ஈரான் அறிந்திருக்கிறது என்றாலும், நிழல் யுத்தத்திலிருந்து வெளியே வந்து நேரடியான போருக்கு அந்நாடு தயாராகிவிட்டது என்பதையே இத்தாக்குதல் உணர்த்துகிறது.
- காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஆறு மாதங்களைத் தாண்டி தொடரும் நிலையில், வரலாற்றில் முதல் முறையாக இஸ்ரேல் மீது நேரடித் தாக்குதலை நிகழத்தியிருக்கிறது ஈரான்.
- பாலஸ்தீனர்களின் இனஅழிப்புக்கு மேற்குலகின் நிபந்தனையற்ற ஆதரவு இஸ்ரேலுக்கு எரிபொருளாக அமைகிறது.
- ஐ.நா. எவ்வளவு முயன்றும் இதுவரை போர்நிறுத்தத்துக்கு இஸ்ரேல் முன்வரவில்லை. காசாவின் 23 லட்சம் மக்கள்தொகையில் 90% பேர் இடப்பெயர்வுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.
- கொல்லப்பட்ட பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 33,000ஐக் கடந்துவிட்டது. சர்வதேச அளவில் எழுந்திருக்கும் எதிர்ப்புகளுக்கு இடையிலும் இஸ்ரேலின் தாக்குதல் இலக்கு காசாவைத் தாண்டி சிரியா, லெபனான் என நீண்டுகொண்டே செல்கிறது.
- இஸ்ரேல் மீதான ஹமாஸின் அக்டோபர் 7, 2023 தாக்குதலைத் தொடர்ந்து மேற்கு ஆசியா-மத்திய கிழக்குப் பகுதியில் எழுந்த புவி அரசியல் நெருக்கடி, பிராந்தியப் போராக மாறிவிடாமல் தடுப்பதற்கான நடவடிக்கையாக அமெரிக்கா எல்லா விதமான ஆதரவையும் இஸ்ரேலுக்கு வழங்கிவந்தது.
- எனினும், ஜெனீவா உடன்படிக்கை, வியன்னா உடன்படிக்கை உள்ளிட்ட சர்வதேச உடன்படிக்கைகளை மதிக்காமல் தொடரும் இஸ்ரேலின் தாக்குதல்கள், நிலைமையை மேலும் சிக்கலாக்கியிருக்கின்றன.
- ஐ.நா.வில் கொண்டுவரப்பட்ட போர்நிறுத்தத் தீர்மானங்களை மேற்குலகின் உதவியுடன் முறியடித்துவந்த இஸ்ரேல், ஈரானின் தாக்குதலைத் தொடர்ந்து ஐ.நா. வின் பாதுகாப்பு கவுன்சிலில் அவசரக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கிறது. இது இஸ்ரேலின் இரட்டை நிலைப்பாட்டை மட்டுமல்லாமல், ஈரானின் தாக்குதலைக் கண்டித்திருக்கும் மேற்குலகின் இரட்டை நிலைப்பாட்டையும் மீண்டும் ஒரு முறை அம்பலப்படுத்தியிருக்கிறது.
- இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹுவின் பிடிவாத அணுகுமுறை, அமெரிக்காவை அதிருப்தியில் ஆழ்த்தியிருக்கிறது.
- ஒரு பெரும் சண்டைக்கு அமெரிக்காவை இழுத்துவிட நெதன்யாஹு முயற்சிப்பதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கவலை தெரிவித்துள்ளார்.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அவசரக் கூட்டத்தில் உரையாற்றிய பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டர்ஸ், அமைதியை நிலைநாட்ட வேண்டிய கூட்டுப்பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.
- அது பிராந்திய அமைதியாக இருக்கட்டும் அல்லது சர்வதேச அமைதி, பாதுகாப்பாக இருக்கட்டும்.
- ஆனால், அந்தக் கூட்டுப் பெறுப்பு இப்போது குறைத்து மதிப்பிடப்படுகிறது. இந்தத் தருணத்தில் மத்தியக் கிழக்குப் பிராந்தியமோ இந்த உலகமோ இன்னொரு போரைத் தாங்காது எனப் பேசியிருக்கிறார்.